பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 07 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகும் மன்-கி-பாத் நிகழ்ச்சிக்கு மக்கள் அதிக அளவில் பங்களித்து வருவது தம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. விளையாட்டுத் துறையில் இளைய தலைமுறையினர் அதிக அளவில் ஆர்வம் காட்டி வருவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.
3. மக்கள் பாதுகாப்பாகவும், எளிதாகவும் ரயில் பயணத்தை மேற்கொள்ள தொடர் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
4. காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.
5. 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தப் போட்டியில் இந்தியா இதுவரை நான்கு தங்கம், 11 வெள்ளி, எட்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் ---

**[]<<<>>>[]**

அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகும் மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சிக்கு மக்கள் அதிக அளவில் பங்களிப்பு அளித்து வருவது தம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு இளையோர் பலர் தங்களது பங்களிப்பினை அளித்து வருவவது பாராட்டுக்குரியது என்று கூறியுள்ளார்.

பிரதமரின் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இம்மாதம் 28-ஆம் தேதி ஒலிபரப்பாகிறது.

மக்கள் தங்கள் கருத்துக்களை மை-கவ், மற்றும் நமோ செயலி மூலமாகவும் அனுப்பி வைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1 8 0 0 – 1 1 7 8 0 0 என்ற எண்ணிலும் மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஐரோப்பிய யூனியன் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ள திருமதி **Ursula von der leyen** –க்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியனுடன் இணைந்து செயலாற்றுவதை இந்தியா ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய யூனியன் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் மொத்தம் உள்ள 720 வாக்குகளில், திருமதி ஊர்சுலா 401 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

**[]<<<>>>[]**

விளையாட்டுத் துறையில் இளைய தலைமுறையினர் அதிக அளவில் ஆர்வம் காட்டி வருவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கேலோ இண்டியா இரண்டாம் கட்ட தொடக்க விழா நிகழ்ச்சியில் இன்று பங்கேற்று பேசிய அவர், விளையாட்டுத் துறையில் இளம் வீரர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்கவும் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றிருப்பது பாராட்டுக்குரியது என்றும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மேட்டுப்பாளையம் - தூத்துக்குடி இடையே வாரம் இருமுறை விரைவு ரயில் சேவையை மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று தொடங்கி வைத்தார்.

மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் அவர் இந்த ரயில் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அப்போது பேசிய திரு எல் முருகன், மக்கள் பாதுகாப்பாகவும், எளிதாகவும் ரயில் பயணத்தை மேற்கொள்ள மத்திய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) –**45**---செகண்ட்*

**[]<<<>>>[]**

பழமையான புண்ணிய தலங்களை பாதுகாக்க அனைத்து சமூக மக்களும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டுமென்று ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா தெரிவித்துள்ளார்.

அனந்தநாக் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், ஜம்மு-கஷ்மீரில் புண்ணிய தலங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் யாத்திரிகர்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

காளிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவரை தேசிய பாதுகாப்பு முகமை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மத்திய பிரதேசத்தில் நேற்று இந்த இயக்கத்தைச் சேர்ந்த ஒரு தீவிரவாதியை ஆயுதங்களுடன் கைது செய்துள்ள நிலையில், இன்று மேலும் ஒரு தீவிரவாதியை கைது செய்துள்ளனர்.

நாட்டில் அமைதியை குலைக்கும் வகையில் வெளிநாடுகளிலிருந்து இவர்கள் செயல்பட்டு வந்ததாகவும், தொடர்ந்து இந்த இருவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தேசிய பாதுகாப்பு முகமை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தை குடிசையில்லா மாநிலமாக மாற்ற மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அரசு சாபில் புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆணையை 530 பயனாளிகளுக்கு அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இன்று நண்பகல் நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 45 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) -38--- செகண்ட்.*

இதனிடையே கர்நாடக அணைகளிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரினால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 45 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி வருகிறது.

இன்று நண்பல் வாக்கில் நீர்வரத்து மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக எல்லையான பிலிகூண்டுலுவில் மத்திய நீர்வள ஆணைய அதிகாரிகள் நீர்வரத்து குறித்து கண்காணித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தேனி மாவட்டம் முல்லைப்பெரியாறு அணைப் பகுதியில் மத்திய துணை கண்காணிப்புக் குழுவினர் தற்போது ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

மத்திய நீர்வள ஆணைய செயற் பொறியாளர் திரு சதிஷ் தலைமையிலான இக்குழுவினர், அணையின் பாதுகாப்பு தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்கின்றனர்.

பருவமழைக் காலங்களில் அணையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்புப் பணிகள் குறித்து இன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு, கண்காணிப்புக் குழுவுக்கு அறிக்கை அளிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

குஜராத், கோவா, மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம் மற்றும் தெலங்கானாவில் இன்று அதி கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த மாநிலங்களில் ஒரு சில இடங்களில் நாளை வரை மழைப்பொழிவு தொடரும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

மத்திய பிரதேசம், விதர்பா, சத்திஷ்கர், ஒடிஸா, கர்நாடகாவின் வடக்குப் பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளாவின் வடக்குப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்யக்கூடும் என்று அது கூறியுள்ளது.,

கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்பதால் கேரளா, கர்நாடகா, லட்சத்தீவு கடற்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தெலங்கானாவில் இன்றும் நாளையும் பல்வேறு மாவட்டங்களில் மிக கன முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

[]<<<>>>[]

ஆசிய 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்தப் போட்டியில் இந்தியா இதுவரை நான்கு தங்கம், 11 வெள்ளி, எட்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

தாய்லாந்தின் ஸ்ரீரச்சாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஆண்கள் ப்ரீ-ஸ்டைல் பிரிவில் ஒன்பது வீரர்கள் பதக்கம் வென்றனர்.

44 கிலோ எடைப்பிரிவில் ப்ரத்மேஷ் பாட்டீலும், 68 கிலோ எடைப்பிரிவில் மண்தீப்-ம், 85 கிலோ எடைப்பிரிவில் ரோணக்-கும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

38 கிலோ எடைப்பிரிவில் சாஹிலும், 41 கிலோ எடைப்பிரிவல் சிவமும், 52 கிலோ எடைப்பிரிவில் சாஹிலும், 57 கிலோ எடைப்பிரிவில் அனுராக்கும், 62 கிலோ எடைப்பிரிவில் சாஹர் விஷ்னோயும், 75 கிலோ எடைப்பிரிவல் திபான்ஷூ டாஹியாவும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

**[]<<<>>>[]**

ஆசியக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இலங்கையில் இன்று தொடங்குகிறது.

தம்புல்லாவில் நடைபெற உள்ள ஆட்டத்தில் இந்தியா — பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நடைபெறும் மற்றொரு போட்டியில் நேபாளம் - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்கொள்கிறது.